மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இந்தத் தனிப்பட்ட ஹரிஜன மக்களுக்குத் தரப்படுகிற சலுகை தரப்படவேண்டுமென்ற முடிவுக்கு வந்து, ஹிந்து சமுதாயத்தில் இருக்கிற பலவேறுபட்ட பிரிவுகளில் இவர்கள் தாழ்வாகக் கருதப்பட்டு, இவர்களை அனைவரோடும் ஏற்றுக்கொள்ளும் உரிமை மறுக்கப்பட்டிருந்த காரணத்தால், அவர்களுக்குத் தனிச் சலுகை தரப்பட்டது. மதம் மாறிய பிறகு அவர்களுக்கு ஏற்றம் குறையும், முற்போக்காளர்களாகக் கருதப்படுவார்கள். உதாரணமாக ஆண்டி என்ற ஹிந்து, மதம் மாறிய பிறகு கிறிஸ்துவ மதத்தில் ஆண்டர்சன் என்று கருதப்படுவார். மற்ற சலவைத் தொழிலாளிகள் அல்லது வேறு யாரும் இப்படிப்பட்ட சமுதாய இழிவுத் தன்மை உடையவர்ளாக கருதப் படவில்லை. எனவே தரப்படுகிற முழு சலுகையும் இவர்களுக்குக் கொடுக்க படவில்லை. ஹரிஜன மக்களுக்கு மதம் மாறிய பிறகு தனியாகச் சலுகை கொடுக்கப்படுகிறது.

திரு. கே. ராஜாராம் : ஹரிஜன மக்கள் கிறிஸ்துவ மதத்திற்கு மாறிய பிறகு இதற்கு முன்னால் சலுகை இல்லாமல் இருந்து 4, 5 வருடங்களுக்கு முன்னால் பிற்பட்ட வகுப்பினருக்குள்ள சலுகை அவர்களுக்கும் கொடுக்க உத்தரவு போடப்பட்டது. சலவைத் தொழிலாளர்கள், நாவிதர்கள் எல்லாம் ஏற்கனவே அந்த சலுகைகளை அடைந்து கொண்டு இருப்பதால் அவர்களுக்கு வேண்டியதில்லை. அந்தச் சலுகை ஏற்கனவேயே இருக்கிறது. ஆகவே ஹரிஜன மக்களுக்குப் புதிதாக பிறப்பிக்கப்பட்ட உத்திரவின் மூலம் சலுகை கொடுக்கப்பட்டு வருகிறது என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இங்கே கேட்ட கேள்வி மிகவும் பின் தங்கிய வகுப்பினர்கள் கிறிஸ்துவ மதத்தைத் தழுவி இருப்பார்களானால் அவர்களுக்கு தரப்படுமா என்பது தான். எனவே மிகவும் பின் தங்கியவர்கள் கிறிஸ்துவ மதத்தை தழுவி இருப்பார்களானால் அவர்களுக்கு எந்த விதமான சலுகையும் தரப்படவில்லை என்பதைத்தான் சொன்னேன். ஆனால் ஹரிஜனங்களுக்கு கொடுக்கப்பட்டு வருகிறது குறிப்பாகக் கல்வி சலுகை கொடுக்கப்பட்டு வருகிறது. பொருளாதார ஏற்றம் பெறும் சலுகைகள் கொடுக்கப்படவில்லை.

Registration of Deeds.

* 202. *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Law and Co-operation be pleased to state—

(*a*) whether it is a fact that many of the persons who go for registration of deeds to Sathur in Ramanathapuram district return without registering them ; and

(*b*) if so, the reasons therefor ?

பத்திரப் பதிவு.

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு சட்ட-கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இராமநாதபுரம் மாவட்ட சாத்தூரில் பத்திரப் பதிவுக்கு வருபவர்கள் பாதிப்பேருக்குமேல் தினமும் பத்திரப்பதிவு செய்ய இயலாமல் திரும்பிச் செல்வது உண்மையா ?

(இ) ஆமெனில், அதற்கான காரணமென்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) and (இ) விவர அறிக்கை ஒன்று பேரவையின் முன்பு வைக்கப்படும். 1967 ஜூலைத் திங்கள் முதல் அக்டோபர் திங்கள் வரை கொண்டுவரப்பட்ட பத்திரங்கள் அனைத்தையும் அந்தந்த நாளிலேயே பதிவு செய்ய முடியவில்லையென்பது உண்மை. ஜூலை முதல் அக்டோபர் வரையுள்ள கால அளவில் சாத்தூரில் ஏராளமான பத்திரங்கள் பதிவு செய்யப்படுவதற்காகக் கொண்டுவரப்படுவது இயல்பு. ஒவ

வொரு பத்திரத்தையும் பதிவு செய்வதற்குக் கணிசமான கால அளவும் உழைப்பும் தேவைப்படுவதால் இக்கால அளவில் பதிவு செய்யப்படுவதற்காகக் கொண்டுவரப்படும் பத்திரங்கள் அனைத்தையும் அந்தந்த நாளிலேயே பதிவு செய்ய முடியவில்லை. பதிவுத் துறைத் தலைவர் இப்பொழுது அந்த அலுவலகத்திலுள்ள ஊழியர்களின் எண்ணிக்கையை உயர்த்தக் கோரியிருக்கிறார். இக்கோரிக்கை தனியே பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவரவர்களே, சாத்தூர் நகரத்திலே உள்ள சப்-ரிஜிஸ்ட்ரார் ஆபிசில் நீண்ட நாட்களாகவே இந்த தொல்லையிருக்கிறது. சென்ற ஆண்டு நானே என்னுடைய நிலத்தை விற்கப் போயிருந்தபோது, இரண்டு நாட்கள் தங்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அப்போதிருந்த அமைச்சர் அவர்களிடம் இதைப் பற்றி கூறி ஏழாயிரம் பண்ணையில் ஒரு சப்-ரிஜிஸ்ட்ரார் ஆபிஸ் வைக்கவேண்டுமென்று கூறியிருந்தேன். அது கவனிக்கப்படவில்லை. இந்த அரசாங்கம் 7 அல்லது 10 மைல் அளவிற்கு ஒரு சப்-ரிஜிஸ்ட்ரார் ஆபிஸ் வைக்க ஏற்பாடு செய்வார்களா ? குறிப்பாக சாத்தூர், ஏழாயிரம் பண்ணையில் வைக்க ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சாத்தூரைப் பொறுத்தவரையில், இது ஒரு சில மாதங்களுக்கு இருந்து வரும் தொல்லையாகும். அதைத் தவிர்க்க கொஞ்சம் கூடுதலாக ஆட்களை போட **Inspecter-General of Registration** கேட்டிருக்கிறார். அது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. புதிதாக எத்தனை அலுவலகங்கள் அமைக்க அனுமதி கொடுக்கப்படுவது என்பது மாவட்ட ரீதியாக இப்போது தேர்ந்தெடுக்கப்படுகிறது. அந்த இடங்களில் ராமனதபுரத்திற்கு இந்த ஆண்டு இடம் இல்லை.

Munsif Court, Thirumangalam.

*** 203.*Q*.—THIRU N. R. THIAGARAJAN** : Will the Hon. the Minister for Law and Co-operation be pleased to state—

(*a*) the number of places inspected for housing the Munsif Court of Thirumangalam, Madurai District ; and

(*b*) the place chosen finally and by whom ?

திருமங்கலம் முனிசிப் கோர்ட்.

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு சட்ட-கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரை மாவட்ட திருமங்கலம் முனிசிப் கோர்ட்டுக்கு இதுவரை எத்தனை இடம் பார்க்கப்பட்டது ?

(இ) யாரால் எந்த இடம் கடைசியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது ?

THE HON. THIRU S. MADHAVAN : (*a*) Five sites.

(*b*) Though the Government have issued orders for acquiring S. No. 31 of Thirumangalam village, the question of acquiring olternate site in S. No. 24 of the village near the Sub-Registrar's office is now under consideration of the Government.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவரவர்களே, முன்சீப் கோர்ட் சம்பந்தமாக கிட்டதட்ட 5, 6 ஆண்டுகளாக பிரேரணை இருந்து கொண்டு வருகிறது. இடத்தைப்பற்றிய பிரச்னை இல்லை. வேலை எப்போது ஆரம்பிக்கப்படும் ? துரிதமாக நடவடிக்கை எடுக்கப்படுமா ?